



தனக்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாட்டை விவரிக்கும்போது இயேசு,

*நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கின்றேன், நான் சுயமாய் வரவில்லை. அவரே என்னை அனுப்பினார்!*

*யோவான் 8:42*

என்றார்!

தான் இறைவனுக்குக் கீழ்ப்படிந்த ஒரு அடியான் என்பதை இயேசு இந்த பைபிள் வசனத்தின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்:

*என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது!*

*லூக்கா 22:42*

*எனக்கு சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகின்றபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கின்றது!*

*யோவான் 5:30*

அன்பு கிறிஸ்தவ சகோதர-சகோதரிகளே!

மேற்சொன்ன கருத்துக்களின்படி, தனது விருப்பத்தின்படியல்லாமல், தனது இறைவனால் மட்டுமே இவ்வுலகத்திற்கு தான் அனுப்பப்பட்டதாகவும் -

இறைவன் தன்னைவிட நல்லவராகவும், உயர்ந்தவராகவும் இருப்பதாகவும் -

தன்னை விட உயர்ந்த ஒருவரின் விருப்பத்தை அங்கீகரித்து, தனது விருப்பத்தை முன்னிலைப்படுத்தாமல் விட்டதன் மூலம் தான் இறைவனைவிடவும் உயர்ந்தவனல்லன் என்பதை இயேசு உறுதிப்படுத்தியதும்,

இயேசு இறைவனோ அல்லது இறைமையில் பங்குள்ளவரோ அல்லர் என்பது பைபிளின் அடிப்படையிலேயே தெள்ளத் தெளிவாகின்றது!

## இயேசு : திருக் குர்ஆனின் பார்வையில்...!

### ⇨ இயேசு கிறிஸ்துவின் உண்மை அந்தஸ்து குறித்து ..!

இயேசு ஒரு இறைத்தூதரே! அத்துடன் அவருடைய பிறப்பு, சாதாரணமான எந்தவிதமான இயற்பியல் தொடர்புகளும் அற்ற மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதச் செயலாகும்! இதனை எல்லாம் வல்ல இறைவன் திருக் குர்ஆனில் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:-

*மேலும், அந்நேரம் வந்தபோது வானவர்கள் கூறினார்கள்: " மர்யமே! திண்ணமாக அல்லாஹ் உன்னைத் தேர்ந்தெடுத்துத் தூய்மையாக்கினான். மேலும், அகிலத்துப் பெண்கள் அனைவரினும் (உனக்கு முதலிடம் அளித்து, தனது திருப்பணிக்காக) உன்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். மர்யமே! உன் இறைவனுக்கு முற்றிலும் வழிபட்டு நடப்பாயாக! மேலும் ஸஜ்தா செய்வாயாக! (அவனது திருமுன்) பணிபவர்களுடன் சேர்ந்து நீயும் பணிவாயாக!"*

*(முஹம்மதே!) இவை யாவும் மறைவான செய்திகள். இவற்றை உமக்கு வஹி மூலம் நாம் அறிவிக்கின்றோம்.*

*(வழிபாட்டில்லத்தின் பணியாளர்களான அவர்கள்) தங்களில் யார் மர்யத்திற்குப் பொறுப்பு ஏற்பவர் என்று முடிவு செய்ய, தத்தமது எழுதுகோல்களை எறிந்து கொண்டிருந்தபோது அவர்களிடையே நீர் இருக்கவில்லை. மேலும், அவர்கள் வாக்குவாதம் செய்துகொண்டிருந்த நேரத்திலும் அவர்களிடையே நீர் இருக்கவில்லை.*

*வானவர்கள் இவ்வாறு கூறியதை நினைவுகூருங்கள்: "மர்யமே! திண்ணமாக அல்லாஹ் உனக்கு தனது கட்டளை பற்றி நற்செய்தி சொல்கின்றான். அதன் பெயர் மர்யத்தின் குமாரர் ஈஸா— 'அல் மஸீஹ்' என்பதாகும் அவர் இம்மையிலும் மறுமையிலும் கண்ணியமிக்கவராகவும், அல்லாஹ்விடம் நெருங்கிய நல்லடியார்களில் ஒருவராகவும் திகழ்வார். மேலும் அவர் - தொட்டில் பருவத்திலும் பக்குவமான வயதை அடைந்த பின்பும் மக்களிடம் பேசுவார். மேலும் நல்லொழுக்கமுடையவர்களில் ஒருவராயும் திகழ்வார்.*

*இதனைக் கேட்ட மர்யம், "என் இறைவனே! என்னை எந்த மனிதனும் தீண்டாமலிருக்க, எனக்கு எப்படி குழந்தை பிறக்கும்?" என்று வினவினார். அல்லாஹ் கூறினான்: " அவ்வாறுதான் நடக்கும். அல்லாஹ் தான் நாடுகின்றவற்றைப் படைக்கின்றான். அவன் எதையேனும் (செய்யத்) தீர்மானித்தால் 'ஆகுக' என்றுதான் அதற்கு கட்டளையிடுவான்; உடனே அது ஆகிவிடுகின்றது."*

*(பிறகு வானவர்கள் தமது பேச்சைத் தொடர்ந்தார்கள்:) இன்னும் அல்லாஹ் அவருக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிப்பான். தவ்ராத்தையும் இன் ஜீலையும் (பைபிளையும்) கற்றுத் தருவான். மேலும் இஸ்ராயீலின் வழித்தோன்றல்களுக்கு அவரைத் தன் தூதராகவும் நியமிப்பான்."*

*(இறைத்தூதர் எனும் அந்தஸ்தில் அவர் இஸ்ராயீலின் வழித்தோன்றல்களிடம் வந்தபோது கூறினார்:) " திண்ணமாக நான் உங்களுடைய இறைவனிடமிருந்து உங்களுக்குச் சான்று கொண்டு வந்துள்ளேன். நான் உங்கள் முன் களிமண்ணிலிருந்து பறவையின் உருவத்தைப் போல் ஒன்றைச் செய்து அதில் ஊதுவேன்; அது அல்லாஹ்வின் கட்டளையினால் பறவையாகிவிடும். மேலும், நான் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு பிறவிக்குருடனையும், வெண்குஷ்டமுடையவனையும் குணமாக்குவேன். இன்னும் இறந்தவர்களை அவனது அனுமதி கொண்டு உயிர்பெற்றெழச் செய்வேன். அதுமட்டுமன்று, நீங்கள் உண்பவற்றையும் உங்கள் இல்லங்களில் சேமித்து வைப்பவற்றையும் உங்களுக்கு அறிவிப்பேன். நீங்கள் இறைநம்பிக்கையுடையோராயின் இவற்றிலெல்லாம் உங்களுக்கும் போதிய சான்று உண்டு. மேலும் தற்பொழுது தவ்ராத்தின் அறிவுரைகளில் இருந்து எவை என் முன் உள்ளனவோ அவற்றை மெய்ப்படுத்திடவும், உங்களுக்கு தடுக்கப்பட்டிருக்கும் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக்கி வைத்திடவும் நான் வந்துள்ளேன். நான் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குச் சான்றினைக் கொண்டு வந்துள்ளேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும், எனக்குக் கீழ்ப்படியுங்கள். உறுதியாக அல்லாஹ்தான் என்னுடைய அதிபதியும் உங்களுடைய அதிபதியுமாவான்! எனவே, நீங்கள் அவனுக்கே பணிந்து வாழுங்கள்! இதுதான் நேரான வழியாகும்!"*

*திருக் குர்ஆன் 3:42-51*

### ⇨ இயேசு கிறிஸ்து இறைமைந்தன் எனப்படுவது குறித்து ..!

மனிதர்களை கடவுளராகவும் - கடவுளின் மைந்தராகவும் - அவதாரங்களாகவும் கருதுவது பண்டைய புராணக்கதைகளில் மிகச் சாதாரணமாகக் காணப்படும் கட்டுக்கதைகளாகும். இது குறித்து திருக் குர்ஆனில் ஏகஇறைவன் கூறுவது அறிவுக்கு முற்றிலும் பொருந்தக் கூடியதும், மறுத்துரைக்க இயலாததும், அனைத்துத் தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு பேருண்மையாகும்:-

*"உஸைர் அல்லாஹ்வின் புதல்வர்" என்று யூதர்கள் கூறுகின்றார்கள். "மஸீஹ் - இயேசு - அல்லாஹ்வின் புதல்வர்" என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் தங்களுடைய நாவினால் கூறும் உண்மைக்குப் புறம்பான) கூற்றுக்களாகும் இவை! இவர்களுக்கு முன்னர் இறைநிராகரிப்பை மேற்கொண்டிருந்தவர்கள் கூறியதைப் போல் இவர்களும் கூறுகின்றனர். அல்லாஹ் இவர்களை நாசப்படுத்துவானாக! அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகின்றார்கள்! அவர்கள் அல்லாஹ்வை விடுத்து மார்க்க மேதைகளையும், துறவிகளையும் தங்களின் ரப் - கடவுளராக்கிக் கொண்டார்கள். மேலும் இதேபோன்று மர்யத்தின் குமாரர் மஸீஹையும் (இயேசுவையும் - இறைவனாக்கிக் கொண்டனர்)!*

*உண்மை யாதெனில், ஒரே இறைவனைத் தவிர வேறெவரையும் வணங்க அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டதில்லை. வணக்கத்திற்குரிய இறைவன் அவனையன்றி யாரும் இல்லை. அவர்கள் செய்யும் இணைவைப்புச் செயல்களிலிருந்து அவன் தூய்மையானவன்!*

*திருக் குர்ஆன் 9:30*

### ⇨ தன்னை இறைவனாகக் கருதும் கிறிஸ்தவர்களுக்காக இயேசு கிறிஸ்து பொறுப்பேற்க மாட்டார்;..!

*(மறுமை நாளில்) அல்லாஹ் இவ்வாறு வினவுவான்: மர்யத்தின் குமாரர் ஈஸாவே! 'அல்லாஹ்வை விடுத்து என்னையும் என் அன்னையையும் கடவுள்களாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று நீர் மக்களிடம் கூறினீரா?" (அப்போது) அவர் பணிந்து கூறுவார்: "தூய்மை அனைத்தும் உனக்கே! எனக்கு உரிமையில்லாதவற்றைக் கூறுவது என்னுடைய பணியல்ல. அவ்வாறு நான் கூறியிருந்தால் அதனை நீ நிச்சயம் அறிந்திருப்பாய். என் உள்ளத்தில் இருப்பவற்றை நான் அறியமாட்டேன். திண்ணமாக மறைவான உண்மைகள் அனைத்தையும் நீ நன்கறிந்தவனாகவே இருக்கின்றாய்!*

*திருக் குர்ஆன் 5:116*

### ⇨ உண்மையில் இயேசு கிறிஸ்து யார் என்பது குறித்து ..!

இயேசு கிறிஸ்துவின் அன்னையாராகிய மேரி எனும் மர்யம் (அலை) அவர்கள் தன்னை ஒருபோதும் இறைவனின் தாய் என உரிமை கொண்டாடியதில்லை. அவர் பரிசுத்தமான, கற்புள்ள, குற்றமற்ற, முன்மாதிரியான - மிகச் சிறந்த ஒரு பெண்மணியாவார். அவருடைய மைந்தராகிய இயேசு கிறிஸ்துவும் ஒழுக்கத்தில் சிறந்த, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மனிதரும் - அவனுடைய திருத்தூதரும் ஆவார். இது குறித்து திருக் குர்ஆன் இவ்வாறு பிரகடனம் செய்கின்றது:

*மர்யத்தின் குமாரர் மஸீஹ் (இயேசு கிறிஸ்து) ஓர் இறைத்தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன் இறைத்தூதர்கள் பலர் சென்றிருக்கின்றார்கள். மேலும், அவருடைய அன்னை வாய்மையுள்ள ஒரு பெண்மணியாவார். அவ்விருவரும் உணவு உண்பவர்களாகவே இருந்தார்கள். பாருங்கள்! நாம் (சத்தியத்திற்கான) சான்றுகளை எவ்வாறெல்லாம் அவர்களுக்குத் தெளிவாக்குகின்றோம். மீண்டும் பாருங்கள்; அவர்கள் எவ்வாறெல்லாம் உண்மையை விட்டுப் பிறழ்ந்து செல்கின்றார்கள்!*

*திருக் குர்ஆன் 5:75*

### ⇨ இயேசு கிறிஸ்து சிலுவையில் கொல்லப்பட்டார் எனும் கிறிஸ்தவர்களின் வாதம் குறித்து ..!

இயேசு கிறிஸ்துவின் ஆரம்பம் போன்றே - அன்னாருடைய முடிவும் உலகத்தார் அனைவரையும் வியப்பிலாழ்த்தும் ஓர் அற்புதமாக அமைந்துவிட்டது. இருப்பினும் பெரும்பாலான கிறிஸ்தவ ஏடுகள் இயேசு சிலுவையில் அறையப்படவில்லை என நிருபித்துக் காட்டும் அதேவேளை இயேசு மரணிக்கவில்லை என்பதையும் கூறியுள்ளார்கள். இது குறித்து அல்லாஹ் திருக் குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

*- உண்மையில் அவர்கள் (யூதர்கள்) அவரைக் கொலை செய்யவுமில்லை; அவரைச் சிலுவையில் அறையவுமில்லை! மாறாக, அவருடைய நிலைமை அவர்களுக்கு சந்தேகத்துக்குரியதாய் ஆக்கப்பட்டுவிட்டது. மேலும், எவர்கள் ஈஸா விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டார்களோ அவர்கள் இதுபற்றி சந்தேகத்திலே இருக்கின்றார்கள். யூகத்தைப் பின்பற்றுவதைத் தவிர இதுபற்றி வேறு எந்த அறிவும் அவர்களிடத்தில் இல்லை. நிச்சயமாக அவர்கள் அவரை- மஸீஹை- கொலை செய்யவேயில்லை. மாறாக, அல்லாஹ் அவரைத் தன் பக்கம் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் வலிமை மிக்கவனும் நுண்ணறிவாளனுமாய் இருக்கின்றான்.*

*திருக் குர்ஆன் 4:157-158*

### ⇨ இயேசுவின் படைப்பு எத்தகையது என்பது குறித்து ..!

உண்மையில் இயேசுவின் படைப்பு எத்தகையது என்பது குறித்து அல்லாஹ் தெளிவாகத் திருக் குர்ஆனில் கூறிவிட்டான்:

*திண்ணமாக, அல்லாஹ்விடத்தில் ஈஸாவின்- இயேசுவின் உவமை ஆதத்தைப் போன்றதாகும். ஆல்லாஹ் அவரை மண்ணினால் படைத்தான். பிறகு 'ஆகுக' என்று கட்டளையிட்டான். உடனே அவர் ஆகிவிட்டார்!*

*திருக் குர்ஆன் 3:59*

### ⇨ இறைவன் எத்தகையவன் என்பது குறித்து ..!

*கூறுவீராக! அவன் அல்லாஹ்,ஏகன்,அல்லாஹ் (எவரிடத்தும்) எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை! மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர்.*

*திருக் குர்ஆன் 112:1-4*

அன்புள்ள கிறிஸ்தவ சகோதர – சகோதரிகளே!
இயேசுவைப் போன்று ஏன் நாமும் ஒரே இறைவனுக்கு முழுமையாக அடிமைப்பட்டு எமது நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடாது? இந்த வழிதான் மனிதனுக்கும் அந்த மனிதனுக்கு நேர்வழி காட்ட வந்த—இறைவனால் அனுப்பப்பட்ட தூதராகிய—இயேசு கிறிஸ்துவுக்கும் பொருத்தமான வழிமுறையாகும்!


للمساهمة معنا في مشروع طباعة الكتب
www.ipc-kw.com 2444117 - 2427383 داخلي: 208
Fahad Salem St. Al-Mulla Saleh Mosque P.O.Box:1613 Safat 13017
Tel.: 2444117 - Fax: 2400057 e-mail:ipb@ipc-kw.com
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

# இயேசு கிறிஸ்து

## - ஒரு உண்மை விளக்கம் -

இன்றைய உலகின் செல்வாக்கு மிக்க மதங்களில் கிறிஸ்தவமும் ஒன்று! நவீன உலகின் வல்லரசுகள் பல கிறிஸ்தவத்தை தம் மதமாக்கிக் கொண்டுள்ளன. மறுபுறம் இஸ்லாமும் இன்றைய உலகில் பெரும்பான்மை மக்கள் பின்பற்றுகின்ற செல்வாக்கு மிக்க மதங்களில் ஒன்றாக இருக்கின்றது! இவ்விரண்டுமே உலகில் மிகப்பெரும் செல்வாக்கு செலுத்தும் மதங்களாக இருக்கின்றன! வெளிப்படையாக நோக்கினால் இந்த இரண்டு மார்க்கங்களுமே இறைகொள்கையில் மாறுபடுகின்றன. இந்த வேறுபாடு இரு பெரும் சமூகங்களையும் பிரித்தே வைத்துள்ளன. இந்த வேறுபாட்டின் உண்மை நிலையை இரு சமூகத்தாரும் சர-ியான முறையில் விளங்கிக் கொள்வார்களேயானால் அது இரு சமூ கங்களையும் நெருங்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை! இத்தகைய ஒருமைப்பாட்டுக்கு இறுதி இறைவேதம் திருக்குர்ஆன் ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அழைப்பு விடுத்தது:

*(நபியே!) நீர் கூறும்: "வேதம் அருளப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள பொதுவான ஒரு விஷயத்தின் பக்கம் வாருங்கள்: அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் நாம் அடிபணிய மாட்டோம். அவனோடு எதனையும் எவரையும் நாம் இணையாக்க மாட்டோம். மேலும் நம்மில் எவரும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் இறைவனாய் ஆக்கிக் கொள்ளக்கூடாது !"*

*திருக்குர்ஆன் 3:64*

பொதுவான வார்த்தைகளில் கூறினால் இந்த வகையில் பைபிள் கூறும் உண்மையான இறைவனின் பக்கமே இந்த அழைப்பு விடுக்கப்படுகின்றது. இயேசு கிறிஸ்துவுக்கு அருளப்பட்ட இந்த இன்ஜீல் - பைபிள் இறைவேதம் இடைக்காலப் பிரிவில் ஒரு சில மனிதரின் கையாடல்களால் திரித்து - பிரித்து விடப்பட்ட போதிலும் அது தன் தூய்மையை முற்றிலுமாக இழந்துவிடவில்லை! சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு அது சத்தியத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல காட்டவே செய்கின்றது! குறிப்பாக கிறிஸ்தவர்கள் இறைவனாகக் கருதும் இயேசு கிறிஸ்துவின் உண்மை நிலையையும் இறைவனைப் பற்றிய உண்மைக் கருத்தோட்டத்தையும் அவரது வாய்மொழி மூலமாகவே பேசுகின்றது.

ஒருபுறம் யூதர்கள், இயேசுவை இறைத்தூதராக ஏற்க மறுத்து அவருடைய பிறப்பையே கேள்விக்குறியாக்கி அன்னாரை பொய்யர் என இழித்துரைத்து குற்றம்சாட்டுகின்றனர். (இத்தகைய எண்ணம் கொள்வதிலிருந்து இறைவன் நம்மைக் காப்பானாக!) மறுபுறம் கிறிஸ்தவர்கள் இதற்கு நேர்மாற்றமாக இயேசுவை இறைமைந்தனாகக் கருதும் அதேவேளை அவரை வணங்கவும் செய்கின்றனர்.

இன்னொருபுறம், முஸ்லிம்கள் இயேசுவை ஆபிரஹாம், ஈஸாக், மோசஸ் மற்றும் முஹம்மத் ஆகியோரைப் போன்ற ஓர் இறைத்தூதராகவே கருதுகின்றனர்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்த கண்ணோட்டம் மூன்று விதமாகக் காணப்படினும் அன்னாருடைய உண்மை நிலை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் ஓரிறை எனும் ஏக தெய்வகொள்கையை உறுதிப்படுத்துகின்றது.

அதுமட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களின் பைபிள் மற்றும் யூதர்களின் தவ்ராத் மூலம் வெளிப்படும் இயேசு கிறிஸ்துவின் வாய்மொழி இந்த இஸ்லாமிய கண்ணோட்டத்துக்கு மேலும் உரம் சேர்ப்பதாக அமைகின்றது! பின்வரும் விஷயங்களை படிக்கும் ஒவ்வொருவரும் இந்த உண்மையை நன்கு உணர முடியும்!

இனி, இயேசு கிறிஸ்து குறித்த உண்மை நிலையை - பைபிள் வேதத்தை மேற்கோள் காட்டியே- ஒவ்வொன்றாக பல்வேறு தலைப்புக்களில் காண்போம்!

### ⇨ இறைவன் ஒவ்வொன்றையும் அறிந்தவன்- ஆனால், இயேசு கிறிஸ்து அவ்வாறல்ல!

அறிவை —ஞானத்தைப் பொறுத்த வரை இறைவன் எத்தகையவனாக இருக்க முடியும்?
ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்தவன். வெளிப்படையான, மறைவான எல்லாவற்றையும் அறிபவன். மிக மிகச் சிறிய பொருள்கள் ஒவ்வொன்றையும் அறியக்கூடியவன். புரிந்திருப்பவன். மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன. அவற்றை அவனைத் தவிர வேறு யாரும் அறியார்.

இத்தகையவும் இதற்கு மேற்பட்டதுமான, மனித அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்டதுமான எல்லையில்லாத ஞானம் படைத்தவனையே நாம் இறைவனாக ஒப்புக்கொள்ள முடியும்.

உதாரணமாக மறுமை நாள் எனும் இறுதித் தீர்ப்புநாள் குறித்த விஷயத்தை எடுத்துக்கொள்வோம். இது குறித்த விஷயங்களை இயேசு கிறிஸ்து முன்வைக்கும்போது அவர்தம் அறிவின் எல்லைக்கு அவரே சாட்சியாக நிற்பதை அன்னாருடைய பைபிள் பிரகடனமே பறைசாற்றுகின்றது:

*அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.*

*மாற்கு 13:32 மேலும் மத்தேயு 24:36*

இயேசு கிறிஸ்துவின் மேற்சொன்ன வாக்குமூலம் மறுமைநாள் எப்போது ஏற்படும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை என்தை உறுதிப்படுத்துகின்றது. இயேசுவே இதனை ஏற்றுக்கொண்டிருப்பதால் அவர் யாவற்றையும் அறிந்தவரல்லர் மேலும் மறைவானவற்றைக் குறித்த எத்தகைய அறிவையும் அவர் பெற்றிருக்கவில்லை என்பது ஊர்ஜிதமாகின்றது. எனவே இயேசு கிறிஸ்து அனைத்தையும் அறிந்த சர்வ ஞானியல்ல என்பதும் அவர் இறைவன் அல்ல என்பதும் தெளிவாகின்றது.

### ⇨ இறைவன் மாபெரும் ஆற்றல் கொண்டவன்; சர்வ வல்லமை உடையவன்-ஆனால், இயேசு கிறிஸ்து அவ்வாறல்ல!

**இறைவனின் வல்லமை எத்தகையது?**

இறைவன்சர்வ வல்லமை கொண்டவன் மட்டுமல்ல அனைத்து வல்லமை மற்றும் ஆற்றல்களின் ஊற்றுக்கண்ணாக விளங்குவதும் அவனே!அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவனாக விளங்குகின்றான். பேரண்டத்தின் ஆட்சியதிகாரம் முழுவதும் அவனிடத்திலே உள்ளது. அற்புதங்கள் நிகழ்த்தும் மாபெரும் அறிவாளன் அவன்!

இயேசு கிறிஸ்து தனது வாழ்வில் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்கள் பல. அவ்வாறு அற்புதங்களை செய்து காட்டுவதற்கு தானே சுயமாக எந்த ஆற்றலையும் பெற்றிருக்கவில்லை என்பதை மொழியும் இயேசு கிறிஸ்து, அதனை தனது தேவனாகிய இறைவனிடத்திலிருந்தே பெற்றுக் கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். இதனை பைபிள் இவ்வாறு பறைசாற்றுகின்றது:

*அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்:பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கின்றது எதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார்;அவர் எவைகளைச் செய்கின்றாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கின்றார்!*

*யோவான் 5:19 மேலும் பார்க்க யோவான் 5:30*

மேற்கண்ட பைபிள் வசனத்தில் தான் செய்யும் அற்புதங்கள் அனைத்தும் தனது விருப்பத்திற்கேற்ப தாமே சுயமாக செய்தது அல்ல, தம்மால் அவ்வாறு எதனையும் செய்ய முடியாது,அத்தகைய சுயஆற்றல் எதுவும் தம்மிடம் இல்லை என்பதை இயேசு கிறிஸ்து ஒப்புக் கொள்கின்றார்!

இதிலிருந்தே இயேசு கிறிஸ்து தாமே சுயமாக அனைத்து அற்புதங்களையும் நிகழ்த்தும் ஆற்றல் கொண்ட தேவன் - இறைவன் அல்ல என்பது தெளிவாகின்றது!

### ⇨ இறைவனுக்கு என்று இன்னொரு இறைவன் இருக்கவில்லை : ஆனால், இயேசு கிறிஸ்துவுக்கு இறைவன் ஒருவன் இருந்தான்

இறுதித் தீர்ப்பாளன் இறைவன் மட்டுமே!அவனே அனைவர்க்கும் அருள் புரிபவன்!

தன்னை வணங்குமாறும்-அடிபணியுமாறும் அந்த இறைவனை வேண்டுபவர் எவரும் இருக்கவில்லை, இருக்கவும் முடியாது. அதேவேளை தான் வணங்குகின்ற, அடிபணிகின்ற, ஜெபம் செய்கின்ற தனக்கு மேலான ஒரு இறைவன் இருக்கின்றான் என்பதை இயேசு ஒப்புக்கொள்கின்றார். இதனை பைபிள் இவ்வாறு ஒப்புவிக்கின்றது:

*...நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகின்றேன் என்று அவர்களுக்கு சொல்லு என்றார்.*

*யோவான் 5:19 மேலும் பார்க்க: மத்தேயு 27:46*

சிலுவையில் அறையப்பட்டபோது இயேசு *"என் தேவனே! என் தேவனே!! ஏன் என்னைக் கைவிட்டீர்?(மத்தேயு 27:46)* என்று குரலிட்டதாக பைபிள் பேசுகின்றது. இயேசுவே பிதாவாக-இறைவனாக-தேவனாக இருந்தால் இவ்வாறு வேதனைப்பட்டிருக்க முடியுமா?

மேலும், ஒருமுறை இயேசு தமது சீடர்களுடன் கெத்செமனே எனும் இடத்திற்கு சென்றபோது, இவ்வாறு பிரார்த்தித்தார்: *"...என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால்நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது..." -மத்தேயு 26:39*

தனது பாத்திரம் இறைவனின் நாட்டப்படியே நீங்கும்என்று இயேசு குறிப்பிட்டுவிட்டு, தானே தனக்கு ஜெபம் செய்துகொண்டாரா , என்ன?

இவ்வாறு இயேசு வேறொருவருக்கு—இறைவனுக்கு வழிபட்டதும் ஜெபம் செய்ததுமே அவர் இறைவனல்ல என்பதற்கு தெள்ளத் தெளிவான ஆதாரமாகும்.

### ⇨ பொதுவாக பலரையும் இறைமைந்தன் என்று பைபிள் கூறும்போது இயேசு மட்டுமே இறைமைந்தனா என்ன?

ஒருபுறம் மாற்கு, லூக்கா, மத்தேயு ஆகிய பைபிள் அத்தியாயங்கள், அனைவருமே இறைவனின் குழந்தைகள் என்றே விளித்துப் பேசுகின்றன:-

*"அப்பொழுது நீ (மோசே) பார்வோனிடம் இஸ்ரவேல், என் குமாரன் என் ஜேஷ்ட குமாரன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்"*

*யாத்திராகமம் 4:22*

*"இஸ்ரவேலுக்கு நான் பிதா, எப்பிராநீம் என் ஜேஷ்ட குமாரன்"*

*எரேமியா 31:9*

இன்னும் பல பைபிள் வசனங்கள் பலரையும் பொதுவாக இறைமைந்தர்கள் என்று கூறும்போது, இயேசு மட்டுமே எப்படி இறைமைந்தனாக இருக்க முடியும்?

சுருங்கக் கூறின் '**இறைமைந்தன்**' என்பது அன்புமிக்க இறைவனுக்கு நெருக்கமாக இருப்பது பற்றி விளக்குவதற்குக் கூறப்பட்டுள்ள ஒரு சாதாரண சொற்பிரயோகமே அன்றி வேறில்லை! எனவே, மறுபுறம் இறைவனே மகனாகவும் பிறந்தான் எனும் கூற்றும் பொருத்தமற்றதாக ஆகின்றது. அதோடு, இறைமைந்தன் எனும் சொல் ஒரு பொதுவான அம்சமாகவே இருக்கின்றதே அன்றி, இயேசுவுக்காக மட்டுமே பொருந்தக்கூடிய வெறுமனே ஓர் அடைமொழிச் சொல்லாக பைபிள் குறிப்பிடவில்லை!

### ⇨ இயேசு சதையினாலும் இரத்தத்தினாலும் உருவான மனிதராவார்!

இறைவன் மனிதனை தனது விருப்பத்திற்கேற்ப படைத்துள்ளான், அவன் வெள்ளையாகவோ அல்லது கருப்பாகவோ அல்லது ஆணாகவோ பெண்ணாகவோ இருப்பினும் சரியே! - இதுதான் பைபிளின் நம்பிக்கை!

*பின்பு தேவன், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக ...என்று கூறினார்!"*

*ஆதியாகமம் 1:26*

ஆனால், இந்த வசனம் பின்வரும் பைபிளின் மற்ற கருத்துக்களுக்கு மாற்றமானதாகும்.

❖ *"இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?*

*ஆதியாகமம் 40:18*

❖ *"இப்படியிருக்க, என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள்? என்று பரிசுத்தர் சொல்கின்றார்.*

*ஆதியாகமம் 40:25*

❖ *"கர்த்தாவே ! உமக்கு ஒப்பானவன் இல்லை: நீரே பெரியவர். உமது நாமமே வல்லமையில் பெரியது! ஜாதிகளின் இராஜாவே, உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்?தேவரீருக்கே பயப்பட வேண்டியது, ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்ஜியத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை!"*

*எரேமியர் 10:6,7*

### இப்போது, கேள்விகளுக்கு வருவோம்!

1. **மேற்கூறிய வசனங்களின் அடிப்படையில் இயேசு எவ்வாறு இறைத்தகைமைகளைக் கொண்டவராக இருக்க முடியும்?**

அடுத்து,

❖ *"ஆகாயமண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்? புலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்?"*

*சங்கீதம் 89:6*

வேதாகமத்தின் ஒரு பகுதி வானம், பூமியில் உள்ள எதுவும் இறைவனாகக் கருதப்படமாட்டாது என்று கூறுகின்றது. அவ்வாறிருக்க,

2. **இறைத்தகைமைகளைக் கொண்ட ஒரு இரட்சகர், இந்த உலகத்தில் காணப்படும் ஒரு ஆற்றலின் துணைகொண்டு பிறப்பது எவ்வாறு?**

இனி,

❖ *"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை*

*யோவான் 1:18*

❖ *"நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை*

*யோவான் 5:37*

பைபிளின் இந்தக் கூற்றுப்படி ஆண்டவனைக் காணவோ, அவனுடைய சத்தத்தைக் கேட்பதற்கோ இயலாது என இயேசு கூறியுள்ளார்.

ஆனால் இயேசுவின் சீடர்கள் பலரும் அவரைக் கண்டும் அவர் பேசியதைக் கேட்டும் இருக்கின்றனர்.

3. **அவ்வாறிருக்க இயேசு எப்படி இறைவனாக முடியும்?**

மேற்கூறிய அனைத்தும் இயேசு இறைவனல்ல என்பதற்கு தெளிவான சான்றுகளாகும்.

மேலும், தனது வாழ்வின் எந்தவொரு கட்டத்திலும் இயேசு தன்னை சர்வ வல்லமை படைத்த தேவனாகக் கருதவுமில்லை, அவ்வாறு அறிவிக்கவுமில்லை! அத்துடன் தான் வணங்குவதற்கு தகுதியானவன் என்று கூறவுமில்லை! அனைத்துக்கும் மேலாக, தன்னுடைய மக்களை ஒரே இரட்சகனின் பக்கம் - ஒரே இறைவனின் பக்கம்- அதுவும் வானத்தில் இருக்கும் ஒரே இரட்சகனின் பக்கம் தலை-லவணங்கும்படி கேட்டுக் கொண்டார்!

மேற்கூறியவற்றைத் தவிர இயேசு கூறிய இன்ன பிற தெளிவான கருத்துக்களை பைபிள் எடுத்துரைப்பதைக் காணுங்கள்!

இறைவனும் தானும் சமமானவர்களல்லர் -இருவரும் ஒருவரல்லர் என்பதையும் உறுதிப்படுத்தும் வகையில்

*என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கின்றார்*

*யோவான் 14:28*

என்றார் இயேசு!

தன்னை ஒருவர் நல்ல தலைவர் என்று போற்றியபோது இயேசு அவரை நோக்கி,

*நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே!*

*லூக்கா 18:19*

என்று கூறுகின்றார் இயேசு!